43


# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon

விலை சதம் 10


**அறிவிப்பு**

காந்தீய- சர்வோதய இலட்சியங்களுக் கமைய கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்கு ஊழியர்கள் தேவை.

விபரங்களுக்கு:-
காந்தி நிலையம்
உருத்திரபுரம்.


மலர் 11 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 104) 1974 ஏப்ரில், மே இதழ்—7-8


# சர்வோதய கிராமம்

கிராம சுயராஜ்யத்தை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றி, உலக சமாதனத்தை நிலை நிறுத்த முடியுமென கடந்த பல ஆண்டுகளாக விநோபா அடிகள் வலியுறுத்தி வருகிறார்கள்.

கிராம சுயதேவைப் பூர்த்தி ஏற்பட்டதும் கிராம சுயராஜ்யம் தானுகவே கிடைத்துவிடும். இதற்கான பணி இன்னும் இலங்கையில் மேற் கொள்ளப்படாதது வருந்தற்குரியது.

இன்றைய சூழ் நிலையில் கிராம சுயராஜ்யம் ஏற்பட உழைப்பது மிக அவசியமாகியுள்ளது. வெறும் பேச்சளவில் கிராம சுயராஜ்யத்தைப் பெறமுடியாது. இதனைக் கருத்திற் கொண்ட நாங்கள் இலங்கையில் எந்த ஒரு கிராமத்தையாவது தெரிவு செய்து கிராம ராஜ்யத்தை ஏற்படுத்த வேண்டுமென நீண்ட காலமாமச் சிந்தித்து வந்தோம். இதற்கான முயற்சிகள் காந்தி நூற்றூண்டு விழாக் காலத்தில் மேற் கொள்ளப்பட்ட போதிலும் பயன் தரவில்லை.

ஆனல், எங்கள் சிந்தனை செயற்பட்டுக் கொண்டு வந்ததின் பயனுக, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பூநகரி - காரியாதிகாரி பிரிவைச் சேர்ந்த கிராஞ்சி கிராமம் சுயதேவைப் பூர்த்திக்கான நடவடிக்கைகளை மேற் கொள்வதற்காக கடந்த 18.04.74 வியாழக் கிழமை அப்பரடிகளின் நினைவு தினத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளதென் பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

இதற்கான ஆலோசனைக் கூட்டத்திற்குக் கிராஞ்சி மக்கள் பெருந்தொகையாச் சமூகளித்தனர். பல்லவராயன் கட்டு கிராம சபை தலைவர் திரு. கு. இரத்தினம், கிராமசேவகர், கிராஞ்சிப் பாடசாலை தலைமையாசிரியர் திரு அ. அ. றிச்மன்ட், ஆசிரியர் க. சிவசாமி ஆகியோர் சமுகமளித்து கிராம மக்களை உற்சாகப் படுத்தினர்கள்.

விசேட அழைப்பின் மீது விநாயகபுரம் (முழங்காவில்) தமிழ் பாடசாலை அதிபர் திரு. சி. கனகநாயகம், அகில இலங்கைக் காந்தி சேவா சங்க பொதுச் செயலாளர் திரு. சி. க. வேலாயுதபிள்ளை உருத்திரபுரம் - குருகுலம் நிர்வாகி திரு. வே. கதிரவேலு ஆகியோர் சமுகமளித்துக் கருத்துரை வழங்கினர்கள். பல பெரியார்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்கள் (இச் செய்திகளை இப பத்திரிகையில் பிறிதோர் பக்கத்தில் காணலாம்)

மகாத்மா காந்தி அடிகளின் சர்வோதய இலட்சியத்திற்கமைய சுய தேவைப் பூர்த்தியை ஏற்படுத்தி கிராம சுயராஜ்யத்தை நிறுவ ஒவ்வொரு கிராமங்களும் சர்வோதய கிராமங்களாக மாற வேண்டும். இதற்கு முன்னேடியாகக் கிராஞ்சிக் கிராமம் அமைய வேண்டும் என்பதே எங்கள் பிரார்த்தனை. இப் பணி இன்றே, நாளையோ நிறைவேறக் கூடியதன்று. பல ஆண்டு களாகக் கடினமாக உழைக்க வேண்டும். இப்பணிக்கு எல்லோரது ஆதரவையும் அன்புடன் வேண்டுகிறோம்.



கிராம சுயராஜ்யத்தில் உலகின் எல்லாப் பிரச்சினைகளும் தீரும். ஆதாரம் சிறியதாக இருந்தாலும் இதில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகிடைக்கும். கிராம சுயராஜ்யம் எவ்வாறு அமைக்கப்படுகிறதோ அவ்வாறே உலகப் பிரச்னைகளுக்கும் பரிகாரம் ஏற்படும். உலகப் பிரச்னைகள் தீர்வதற்கான சாவி கிராமப் பிரச்னைகள் தீர்வதில் இருக்கிறது. இதை நாம் செய்தால் உலகப் பிரச்னைகள் தீர வழி துலங்கிவிடும்.

—விநோபாஜி.

## நன்றி

கொழும்பு மகளிர் இந்து மன்றம் இரத்மலானை சர்வோதய நிகேதன மாணவர்களுக்கு புத்தாண்டு உடைக்காக நூறு ரூபா அன்பளிப்புச் செய்துள்ளது.

## சர்வோதய பாத்திர அன்பர் மறைவு

தெகிவளை இரத்தினகார இடத்தைச் சேர்ந்த வரும் இலங்கை வங்கியோக் வீதிக் கிளையில் பிரதம சிருப்பராகக் கடமையாற்றிய வருமான திரு. இ. சிதம்பரநாதன் 16.3.74இல் இயற்கை எய்தினர் அன்னரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னரின் குடும்பத்தினருக்கு அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்.

காந்தீயம்

உருத்திரபுரம், [இலங்கை]
தொலை பேசி: 254
கிளிநொச்சி
காந்தி ஆண்டு 104
1974 ஏப்ரில், மே.

# கிராம சுயராச்சியம்

இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் யாரேனும் கிராம சுயராச்சியம் அவசியம் என்று சொன்னால், பலர் அது இயல்பிலாதவனின் கடைசி நோக்கம் என்று எள்ளி நகையாடுவர். ஆனால் இப்பொழுது உலகம் கிராம சுயராச்சியத்தின் அடிப்படையில் அமைய வேண்டிய நிலையை நாடிச் செல்கிறது என்பதில் ஓர் ஐயமில்லை. இது எவ்வாறு என்று சிலர் கருதலாம்.

உலகம் விஞ்ஞானத்தில் முன்னேறி, தொழினுட்பத்தால் இயங்கி, ஏராளமான நுகர் பொருள் பாவனைப் பொருள்களைக் குவித்து வரும் காலத்தில், கிராமத்தின் அடிப்படையில் நாம் என்னத்தை உற்பத்தி செய்யலாம்? எவ்வளவில் நாகரிக முறையில் வாழலாம்? என்று ஐயமெழுவது இயற்கையே. இதற்குரிய விடையை நாம் முறைப்படி ஆராய்வோம்.

ஒவ்வொரு மனிதனும் தான் வாழ் சூழலைப் பயன் படுத்தி வாழ்வை அமைக்கின்றான். தன்னையடுத்த நிலத்தை, கடலை, மலையை, காட்டைப் பயன் படுத்தி தன் உணவு, உடை, உறையுள் எல்லாவற்றிற்கும் பயன்படுத்திக் கொள்கிறான். நில இயற்கையால் ஒருமித்து வாழவேண்டியவர் இயற்கை வளத்தால் அவ்வாறு வாழ நிர்ப்பந்திக்கப்படுகிற பொழுது, அங்கு கிராம சமுதாயம் தோன்றுகிறது. ஆயின் பெரும் பாலும் தனி ஒரு கிராமமே உணவு, உடை, உறையுள் எல்லாவற்றிற்கும் வேண்டிய மூலப் பொருள்களை அளித்து விடுவதில்லை. அடுத்த கிராமத்திலுள்ள சில பொருள்களை, பண்ட மாற்று மூலம் வாங்க வேண்டியுள்ளது. இம்முறையினால் இயன்றவரையில் கிராமங்கள் பல பொருளாதாரத்தால் தன்னிறைவு பெறக் கூடியன ஆகின்றன; சில மற்றையவற்றின் துணையோடு தன்னிறைவு பெறக் கூடியன ஆகின்றன. இது பொருளாதாரச் சுதந்தரம். இது பொருளியலில் மக்களுக்கு சுயராச்சியத்தை அளிக்கின்றது.

அடுத்தது நாம் கவனிக்க வேண்டியது நிருவாகத்தில், ஏற்படுத்தக் கூடிய சுயராச்சியமாகும். பொருளாதார நிறைவினை ஏற்படுத்திக் கொண்டால், உள்ளூர்ப் பிணக்குகளைத் தீர்த்து, நிருவாகத்தில் தானே இயங்கும் ஒரு சக்தியை ஒரு கிராமம் இயல்பாகவே பெற்று விடும்.

பொருளாதாரத் தன்னிறைவால் தான் ஒரு கிராமம் சுயராச்சியம் பெறலாம். கிடைக்கக் கூடிய பொருள் வளத்தோடு மன அமைவு பெறாத இடத்தில் தான், அடுத்த கிராமத்தாரையோ அடுத்த இனத்தையோ நாட்டையோ அபகரித்தும் சுரண்டியும் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இது பலிக்கா விட்டால், பண்ட மாற்றினால் பொருள்களைக் கொடுத்து வாழ வேண்டியுள்ளது.

நாகரிகம் வளர்ந்து, உலக வியாபாரம் செழித்தோங்க, முதலாளித்துவ ஏமாற்று விளம்பரங்களால் பல மக்கள் தம் சுயபூர்த்திக்கு வேண்டியிராத பொருள்களை நுகரும் பேராசைக் குட்பட்டனர். இதனால் மூலப் பொருள்களுக்கும் உற்பத்திப் பொருள்களுக்கும் ஒரு நாட்டவர் பிற இனத்தவரை எதிர் பார்க்க வேண்டி வந்தது. பகை, போட்டி ஏற்பட பிற நாட்டவர் தம் பொருள்களைக் கட்டுப்படுத்தவும். விலையேற்றவும் நேர்ந்த பொழுது இவர் அல்லலுற்றனர். இக்கதி எதனால் நேர்ந்தது. நாடுகள் தம் பொருளாதார சுதந்தரத்தைப் பேணுமையினாலும் மிதமிஞ்சிய ஆடம்பர நுகர்வினாலுமாம்.

எனவே நம்மை இப்பொழுது எதிர் நோக்கி நிற்பவை பொருளியலில் தன்னிறைவு, அதனைக் கட்டுப்படுத்தி விநியோகிப்பதில் சுய உரிமை, ஆகிய இரண்டு பிரச் சினைகளுமாம். பொருளுற்பத்தி, விவசாய மேம்பாடு எல்லாம் கிராமங்களை அடிப்படையாகக் கொண்டே எழுகின்றன. ஒவ்வொரு கிராமமும் தனக்கியன்ற விவசாயப் பொருளை, கைத்தொழிற் பொருளை வளம் படுத்தி மற்றைச் சூழ்ந்துள கிராமங்களுடன் ஒத்துழைத்து பண்ட மாற்று, பரிமாற்று செய்து கொள்ளுமாயின், கிராமங்கள் ஒரு பொழுதும் பட்டினி, பஞ்சம், வேலையில்லாமை முதலியவற்றால் பீடிக்கப்படா.

கிராமங்கள் ஒத்துழைத்தால், நடுத்தரமான பாரியகைத் தொழில்களையே நிறுவி நடாத்தலாம். வெல்லம், துணி, சீமெந்து, காகிதம், உணவுவகைகள் போன்ற பலவற்றைச் சிறு சிறு மாவட்டப் பகுதிகளில் அமைத்து நடாத்தலாம். இத்திட்டங்கள் பெருவளவில் அவ்வக் கிராம சமுதாயங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியன வாயமையில் பொருளாதார சுதந்தரம் தானாகவே அமைகின்றது. இந்தப் பொருளாதார அமைப்புக்களோடு இயைந்த நிருவாகங்கள் தாமாகவே கிராம சுயராச்சியமாக அமைந்து விடுகின்றன.

இவ்வாறான முறை ஒன்று நம் நாட்டில் இற்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன் அமைந்திருந்தால் நம் நாடு பொருளாதார சுதந்தரம் பெற்ற நாடாக விளங்கியிருக்கும். கிராமங்கள் வறுமைப்பட்டிரா. அரசியலிலேயே அதிகார வாஞ்சையும் பதவி மோகமும் தலையெடுக்காது. பொருளாதார மேம்பாடும், தன்னிறைவும், மனத் திருப்தியும் ஏற்பட்டிருக்கும்.

இன்றைய உலக பொருளாதார, அரசியல் நெருக்கடிகள், மனிதனை கிராம சுயராச்சியத்தின் அவசியத்தை நெஞ்சிலுறுத்துவனவாயுள்ளன. மகாத்மா காந்தி கிராம சுயராச்சியம் என்ற கருத்தைக் கூறும் பொழுது முற்றுமுணர்ந்த தீர்க்கதரிசியாகவே கூறினார் என்பதை மறக்க முடியாது.

— இ. இ.

# கருத்துப் புரட்சி

காந்திய இயக்கத்தினர் புதிய சமுதாயத்தை ஈடு இணையற்ற ஒப்பில்லாத சர்வோதய சமுதாயத்தை — அமைப்பதன் மூலமாகத்தான் இன்றைய பொருளாதார, அரசியல் சமுதாயக் குறைபாடுகளுக்கு ஒரு நிரந்தரமான தீர்வு காண இயலுமென்று நம்புகின்றனர். இந்த உறுதியான நம்பிக்கையே பலவகையான ஆக்க பூர்வமான திட்டங்களுக்கு ஆற்றலை அளிக்கிறது.

காந்தியடிகள் மனித வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஓர் அமைதியான அறப்புரட்சியைத் தொடங்கி வைத்தார். அதனை இன்று அறமுனிவர் வினோபாவே போன்றவர்கள் தொடர்ந்து நடத்துகின்றனர். எண்ணற்ற தொண்டர்கள் நாடெங்கும் இந்த சமுதாய மாற்றப்பணியை 'கர்மயோக' மாகச் செய்து கொண்டிருக்கின்றனர்.

சர்வோதய சமுதாயம் வெறும் அமைப்பு முறைகளில் ஏற்படுகின்ற புற மாற்றத்தை மட்டும் சார்ந்து அமைவதில்லை. அதன் அடிப்படை அகமாற்றம். புதிய சமுதாயத்தை அமைப்பதற்கு முன்னோடியாகப் புதிய மனிதர்களை உருவாக்க வேண்டும். கட்டிடம் கட்டுபவர்கள் செங்கற்கள், சுண்ணாம்பு, சிமிண்டு போன்றவற்றை முதலில் பெற வேண்டும்.

அகமாற்றம் என்பது மனவழி நடைபெற வேண்டியது. மன மாற்றத்தை எப்படிப் பெறுவது? இன்றைய அமைப்பு முறைகளும் நடைமுறைகளும் நமது உள்ளங்களில் சில போலியான மதிப்பீடுகளை ஏற்படுத்தியுள்ளன. எடுத்துக்காட்டாக ஒரு மனிதரின் வெற்றி, தோல்வியை அவர் தேடி வைத்திருக்கும்செல்வத்தைக்கொண்டு மதிப்பிட முயல்வதைக் கூறலாம். அவர் வையத்துள் வாழ்ந்த வாழ்க்கை முறையை அல்லவா மதிப்பிட வேண்டும்

புதிய மதிப்பீடுகளை உருவாக்க பழைய தவறான மதிப்பீடுகளைத் தகர்ப்பது தேவையாகிறது. இதற்குக் 'கருத்துப்புரட்சி' தேவை.

ஒரு போர் வீரன் போர்க்களம் நோக்கிச் செல்கின்ற பொழுது தக்க பயிற்சியோடும், வேண்டிய கருவிகளோடும் செல்கிறான். அவனது வெற்றி அவன் கைக்கருவிகளைப் பயன்படுத்துவதில் இருக்கிறது. அதுபோல சர்வோதய ஊழியர்கள் சர்வோதய நிர்மாணப் பணியின் போது உரிய பயிற்சியோடும் தெளிவான கருத்துக்களோடும் ஈடுபட வேண்டும். இதனை மற்றவர்களும் பெற வழிவகுக்க வேண்டும்.

மனமாற்றம் கருத்துக்களின் வழியாக ஏற்படுகிறது. ஒருவருக்குக் கருத்துக்கள் இரண்டு வழிகளில் கிடைக்கலாம். ஒன்று பெரியவர்களின் பேச்சும், செயலும். மற்றொன்று எழுத்து. இரண்டும் வலிமையான கருவிகள்.

வழிகாட்டத்தக்க சான்றோர்கள் உடன்வாழ்ந்தால் அவர்களது வாழ்க்கையே எழுதாத இலக்கியமாக முன்னால் இருக்கும். அவர்களது சிந்தனை, சொல், செயல் ஆகியவை மற்றவர்களிடம் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தும். புத்தர், ஏசு, காந்தியடிகள், இராமகிருஷ்ணபரமஹம்சர், வினோபா போன்றவர்களின் வையக வாழ்க்கையிலிருந்து இதனை அறிந்து கொள்ளலாம். ஆனால் இத்தகைய சான்றோர்கள் எல்லாருக்கும் கிடைப்பதில்லை. இவர்களோடு வாழ்கின்ற பேறு பெற்றவர்கள் சிலரே.

பொதுவான வாழிகாட்டியாக நல்ல எழுத்து அமைகின்றது. உள்ளத்தில் உண்மையொளி பெற்றவர்கள் எழுதுகின்ற எழுத்துக்கள் காலத்தை வென்று நிற்கின்றன. இறவாத எழுத்துக்கள் என்றும் வழிகாட்டிகளாக இருக்கின்றன.

எழுத்துக்கள் (எழுதப் பெற்ற கருத்துக்கள்) இரண்டு வழிகளில் நமக்குக் கிடைக்கின்றன. ஒன்று நாள், வார, திங்கள் இதழ்களில் வெளியாகின்ற கட்டுரை, கதை, கவிதை போன்ற படைப்புக்கள்; மற்றொன்று நூற்கள்.

சர்வோதய கருத்துக்கள் இந்த இரண்டு வழிகளிலும் கிடைக்கின்றன. 'கிராமராஜ்யம்' 'சர்வோதயம்' போன்ற இதழ்கள் கருத்துக்களுக்கு விளக்கம் தருகின்றன. அன்றாட வாழ்வில் ஏற்படுகின்ற சிக்கல்களுக்குத் தீர்வு காண முயல்கின்றன. நாடெங்கும் நடக்கும் ஆக்கப் பணிகளைச் செய்திகளாகத் திரட்டித் தருகின்றன.

சர்வோதய இலக்கியம் தனித்துறையாக வளர்ந்திருக்கின்றது. தமிழ் நாடு காந்தி நினைவு நிதியினரும், சர்வோதய பிரசுராலாயத்தினரும், இன்னும் சில தனியார் நிறுவனங்களும், அரசின் வெளியீட்டுத் துறைகளும் பல அருமையான நூற்களை திட்டமிட்டு, இலாப நோக்கமின்றி குறைந்த விலையில் வெளியிட்டிருக்கின்றன.

இத்தகைய நூற்களை 'காந்தியடிகள் எழுதியவை,' 'காந்தியடிகளைப் பற்றி பிறர் எழுதியவை,' காந்தியத் தத்துவம்,' 'காந்திய அரசியல்,' 'காந்தியப் பொருளாதாரம்,' 'காந்திய சமுதாய இயல்,' 'காந்தியச் சமயம்,' 'வினோபா நூற்கள்,' 'காந்தியச் சிறுவர் நூற்கள்' என்று பலவகையாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு பிரிவிலும் எண்ணற்ற நூற்கள் வெளியிடப் பெற்றிருக்கின்றன.

காந்திய இலக்கிய நூற்கள் மிகுதியாக விற்காமல் தேங்கியிருப்பதாகக் கூறப் பெறுகின்றது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. இன்றையப் படித்தவர்கள் பெரும்பாலும் பரபரப்பான கவர்ச்சியான உணர்வுகளைத் தூண்டுகின்ற நூற்களை பொழுது போக்கிற்காகப் படிக்க விரும்புகின்றனர். பலருக்குத் தங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற மன உந்துதல் இல்லை. சர்வோதய இயக்கத்தில் ஈடுபட்டிருக்கின்றவர்களும், செயல்களுக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவத்தைக் காந்திய நூற்களுக்குக் கொடுப்பதில்லை.

சர்வோதய இயக்கத்தில் நேரடியாக ஈடுபட்டிருக்கின்றவர்களும், நம்பிக்கை கொண்டிருப்பவர்களும்கிடைக்கின்ற சர்வோதய நூற்களை எல்லாம் படித்துத் தங்களிடம் வளமான கருத்துக்களைச் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கு விளக்கம் தரத்தக்க தெளிவும், திறனும் பெற நூற்களைப் படிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

ஒவ்வொருவரும் 'சத்தியசோதனை" கீதைப் பேருரைகள் போன்ற-திரும்பத் திரும்பப் படிக்கத் தக்க நூற்களைச் சொந்தமாகவே வாங்கி வைத்திருக்கலாம்.

உள்ளத்தில் ஏற்படுகின்ற தெளிவு நல்ல உறுதியான கொள்கைப் பிடிப்பாக மலரும். தெளிவு ஏற்படுத்த உற்ற துணை நூற்களே. ஆதலால் கருத்துப் புரட்சிக்குக் கருவிகளான நூற்களில் கவனம் செலுத்துதல் இன்றைய காலத் தேவை. உணர்ந்து செயல்பட்டால் நல்ல பலன்கள் விளையும்

—பேராசிரியர் மா. பா. குருசாமி

## வாழ்த்துச் செய்திகள்

1974 ஏப்ரல் 18 ஆம் நாள் கிராஞ்சியில் நடைபெற்ற சர்வோதய கிராம அமைப்புக் கூட்டத்திற்குக் கிடைத்த வாழ்த்துக்கள்.

உங்கள் பணிக்கு எல்லோரும் ஆதரவு தரவேண்டும் என்று இறைவனை வேண்டுகிறேம். இன்று நாட்டிற்கு சர்வோதயம் தான் தேவை. எங்கள் ஆதரவு எப்பவும் உண்டு.

''சிவ நெறிப் புரவலர்''
''சிவ தர்ம வள்ளல்''
க. கனகராசா
உரிமையாளர்
மில்க்வைற் சோப் தொழிற்சாலை,
யாழ்ப்பாணம்

★ ★ ★ ★

நற் கருத்தை நாடெங்கும் பரப்ப
நல்ல தினத்தினில் நாமொன்று கூடி
நல்ல வழிகளை நாடித் தெளிய
நல்ல விநாயகன் நமக்கருள் புரிகவே

திரு - சி. கனகநாயம்
ஆசிரியர்
விநாயகபுரம்

★ ★ ★ ★

கிராஞ்சிக் கிராமத்தில் சர்வோதயக் கிராமம் அமைப்பது பற்றிய ஆலோசனைக் கூட்ட அழைப்புக் கிடைத்தது. நான் 18-4-74 இல் கிராஞ்சிக்கு வரக் கூடிய வசதி ஏற்படுமோ தெரியவில்லை. வரக் கூடுமெனில் வர முயலுவேன். வராவிட்டாலும் எமது ஆசிகளும் ஆலோசனைகளும் எப்பவும் உண்டு

திரு. இ. கந்தையா
தலைவர்
அகில இலங்கை காந்தி சேவா சங்கம்

★ ★ ★ ★

தாங்கள் கிராஞ்சியில் எடுத்துக் கொண்ட திட்டம் மிகவும் வரவேற்கத் தக்கது. உங்களுடைய ஆலோசனைப்படியே செய்யவும். பிறருடைய ஆலோசனையைக் கேட்கலாம். ஆனுல் நாம் நினைத்தபடியே தான் செயல் படுத்த முடியும்.

டக்டர். ஆ. தருமலிங்கம்
காரைநகர் பஞ்சாயம்

## கிராம கலாசாரத்தின் தேவை.

கிராமம் முழுவதும் ஒரே குடும்பமாக இணையும் போது அதற்கென சிறப்புமிக்க பண்பாடு உருவாகிறது. அந்த கிராம அமைப்பின் சிறப்பு அம்சமே இதுவாகத் தான் இருக்கும். ஒரு தனி மனிதனிடமுள்ள சிற்புகளுக்குரிய மதிப்பை போன்று இதுவும் போற்றப்படும். கிராம வாழ்க்கையிலுள்ள இச் சிறப்பு அம்சங்களின் காரணமாக நாம் நிலையான வாழ்க்கையை நோக்கி, மகிழ்ச்சியான வாழ்க்கையை நோக்கி முன்னேறிச் செல்ல இயலும். மனிதனின் ஆயுள் மிக அதிகமாகப் போனுல் எழுபது ஆண்டுகளுக்கு மேற் போகாது. ஆனுல் கிராமப் பண்பையும், கலாசாரத்தையும் அடிப்படையாகக் கொண்ட இந்த அமைப்பு நிரந்தரமானதாக ஆகி விடும். நாம் உருவாக்க விரும்பும் கலாசாரமானது மனித மனப் போக்கைச் சார்ந்ததாக மட்டும் இராது. எல்லாப் பிரச்சனைகளையும் அகிம்சை, சத்தியத்தின் வழியில் எவ்வாறு தீர்க்க முடியும் எனபதையே நாம் நமது முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருந்திருக்கிறேம். எச்சரிக்கையுடன் செயல் படுத்துவதுடன், நுணுக்கமாகவும் சத்தியத்தையும் அகிம்சையையும் அமல் செய்வோமானுல், இந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த சமுதாயத்தை நிலை நிறுத்த இயலும்.

கிராமக் கலாசாரம், பண்பாடு பற்றி யாருமே சிந்திப்பதில்லை. ஆனுல் வலுமிக்க இந்த அடிப்படை மீதல்லாமல், கிராம சுயராஜ்யமோ, கிராம சுயதேவைப் பூர்த்தியோ நிலைபெற்றிருக்க முடியாது. பல நூற்றுண்டுகளின் அனுபவத்திற்குப் பின்னர் எல்லாவித இன்னல்களையும் சகித்துக் கொண்டு உறுதிமிக்க கலாசாரத்தை இந்தியா உருவாக்கியிருக்கிறது. இந்தக் கலாசாரம் நிலைத்திருப்பதற்கு முக்கிய வாரிசுதர்ர்கள் கிராமத்திலுள்ள பெண்களேயாவர். இந்தப் பண்பாட்டின் காரணமாகத்தான் கிராம வாழ்க்கைக்கு அழகும் வலுவும் கிடைக்கின்றன.

டாக்டர் ஜே. ஸி. குமரப்பா

## சர்வோதய கிராமம் அமைப்புக் குழுவினர்

18.04.74 வியாழக்கிழமை கிராஞ்சியில் நடைபெற்ற சர்வோதய கிராம அமைப்பு ஆலோசனைக் கூட்டத்தில் பின் வருபவர்கள் செயற்குழுவாகத்தெரிவு செய்யப் பட்டனர்.

திரு. செ. முத்துலிங்கம்
,, ப. செல்வரத்தினம்
,, சி. தர்மராசா
,, வ. லட்சுமணன்
'' க. செல்வரத்தினம்
'' வீ. கனகசுந்தரம்
,, ஆ. க. சுப்பிரமணியம்
,, சி. இராசரத்தினம்
'' ப. முருகேசு
'' சி. ஜெகதீஸவரன்
'' க. பாலசிங்கம்
'' சி. சங்கரப்பிள்ளை
,, வ. யோகநாதன்
,, ஐ. இரகுநாதன்
,, ஆ. சரவணமுத்து
,, செ. கந்தசாமி
,, சோ. க. தம்பிப்பிள்ளை — அமைப்பாளர்

## வரப் பெற்றேம்

லோக் சேவக்
சர்வோதயக் கருத்துப் புரட்சி இதழ்
68, எம். ஸி. ரோடு,
சென்னை. 21

★ ★ ★ ★

தமிழகம்
சமய, இலக்கிய திங்களிதழ்
சிறப்பாசிரியர்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்
குன்றக்குடி
இராமநாதபுரம் மாவட்டம்
தமிழ்நாடு

★ ★ ★ ★

மாவலி
தொழிலாளர் தேசிய சங்க வெளியீடு
618, 3/3 காலி வீதி
கொழும்பு - 3

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.